# NEWS LETTER

Contact Us !

Main Road,Puthukudiyiruppu (30158), Batticaloa, Sri Lanka.


Phone : +94 653125555 | +94 777105569
WhatsApp / Viber: +94 77 677 0780

Email : vivekananda.cflk@gmail.com
www.vcf.lk

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

Vivekananda Community Foundation



## உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான தொழில்வழிகாட்டல்



எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் மாணவர்களுக்கான வலுவூட்டல் செயற்பாடுகளில் பொறுப்பெடுக்கப்பட்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய ஆரையம்பதி பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டலுக்கான கலந்துரையாடல் 07.01.2025 அன்று எமது விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றது.

இந் நிகழ்வு அறக்கட்டளையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றதோடு இதன் மூலம் மாணவர்களுக்கு தொழிலுக்கான திறவுகோல் மேற்கொள்ளப்பட்டு மாணவர்களின் எதிர்காலக் கல்வி பாதை, தொழில் முனைவு முயற்சிகள் மற்றும் சமூகத்தில் அவர்கள் அமைக்கக் கூடிய உறுதியான இடம் தொடர்பில் அவர்களுக்குத் தேவையான வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டதோடு அவர்களின் அடுத்த கட்ட கல்வி மற்றும் தொழில்முனைவு முயற்சிகளுக்கான தெளிவையும் பெற்றனர்.




அவ்வாறே உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய கரடியனாறு மற்றும் இலுப்படிச்சேனை பிரதேசத்திற்குட்பட்ட மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டலுக்கான கலந்துரையாடல் 08.01.2025 அன்று எமது மனித நேய சமுதாயக்கல்லூரியில் இடம்பெற்றது. மாணவர்களின் எதிர்கால திட்டங்கள் பற்றிய தெளிவூட்டலைத் தொடர்ந்து தொழிநுட்ப உலகில் அடிப்படைக் கணினி அறிவின் அவசியம் பற்றியும் எடுத்தியம்பப்பட்டது.



## ஜீவானந்தா மகளிர் இல்ல மாணவிகளுக்கான உடைகள்

புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள ஜீவானந்தா மகளிர் இல்லத்தில் வசிக்கும் மாணவிகளுக்கான உடைகள் 09.01.2025 அன்று வழங்கி வைக்கப்பட்டது.




## அன்னை ஸ்ரீ சாரதா நிலைய மாணவிகளுக்கான உடைகள்

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவில் அமைந்துள்ள அன்னை ஸ்ரீ சாரதா நிலையத்தில் கல்வி பயிலும் மாணவிகளுக்கான உடைகள் 09.01.2025 அன்று வழங்கி வைக்கப்பட்டது.





சுவாமி விவேகானந்தரின் 163வது ஜனன தினத்தினை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு எமது விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றது. எமது கல்லூரியின் பயிலுனர்கள், பழைய மாணவர்கள் உள்ளிட்ட சேவையாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டதோடு விசேட பூஜைகளும் இடம்பெற்றது.




எமது மாதிரிப் பாலர் பாடசாலையான ஆரையம்பதி பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட திருநீற்றுக்கேணி பிரதேசத்தில் அமைந்துள்ள நலன்புரிப் பாலர் பாடசாலையில் கல்வி பயின்ற சிறுவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு 16.01.2025 அன்று இடம்பெற்றதோடு எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின்
சேவையாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# விவேகானந்த குடும்பத்தினரின் புதுவருட நிகழ்வு



எமது விவேகானந்த குடும்பத்தினரின் புதுவருடக் கொண்டாட்டம் 01.01.2025 அன்று எமது விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரியில் இடம்பெற்றது. விவேகானந்த தொழிநுட்பவியல் கல்லூரி, விவேகானந்த சமுதாய அறக்கட்டளை, அமிர்தா உள்ளிட்ட விவேகானந்த குடும்பத்தின் அனைத்து சேவையாளர்களும் கலந்துகொண்டதோடு பூஜைகளும் இடம்பெற்றது.





பின்தங்கிய கிராமங்கள் தோறும் கணினிப் பயிற்சிக் கூடம் என்ற எமது திட்டத்தில் உள்வாங்கப்பட்ட பாடசாலையான வெருகல் பிரதேசத்தில் அமைந்துள்ள துவாரகா வித்தியாலயத்திற்குரிய களவிஜயம் 22.01.2025 அன்று இடம்பெற்றதோடு மாணவர்களின் அடைவு மட்டங்களும் மேற்பார்வை செய்யப்பட்டது.





எமது திட்டங்களினூடாகப் பொறுப்பெடுக்கப்பட்டு எம்முடன் இணைந்து பயணிக்கும் பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான வாழ்க்கைத்திறன் பயிற்சி செயலமர்வு 25.01.2025 அன்று இடம்பெற்றதோடு எமது 5 பாலர் பாடசாலைகளிலும் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.










## மாணவர்களைப் பொறுப்பெடுக்கும் திட்டத்தில் மேலும் 7 மாணவர்கள்

வறுமை நிலையில் தாய், தந்தையை இழந்த, குடும்ப வருமானம் மிகவும் குறைவாக உள்ள குடும்பத்தில் பாடசாலைக் கல்வி கற்கும் பிள்ளைகளுக்கு கற்றலுக்கான மாதாந்த கொடுப்பனவு வழங்குவதன் மூலம் அவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்கு உதவியாக இருப்பதுடன், கற்றலில் பெறுபேறுகளை அதிகரித்தல் மற்றும் பாடசாலையில் இருந்து இடைவிலகலை குறைத்தல் போன்ற விளைவுகளின் மூலம் பிள்ளையின் கற்றலில் ஊக்கத்தை ஏற்படுத்துவதே எமது நோக்கமாகும். அந்த வகையில், மாணவர்களைப் பொறுப்பெடுக்கும் திட்டத்தில் மேலும் 7 மாணவர்கள் பொறுப்பெடுக்கப்பட்டு அவர்களுக்கான முதற்கட்ட தொகை வழங்கிவைக்கப்பட்டது.






**Sponsor a Student**

**per Month – LKR 3,500**

அவ்வாறே எமது திட்டத்தினுள் உள்வாங்கப்பட்டு மாதாந்தம் உதவித்தொகை பெற்றுக்கொள்ளும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான களவிஜயம் 08.01.2025 அன்று இடம்பெற்றதோடு மாணவர்களின் அடைவு மட்டங்களும் மேற்பார்வை செய்யப்பட்டது.





பின்தள்ளப்பட்ட கிராமங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்விக்கு வறுமை ஒரு தடையாகி விடக் கூடாது என்னும் தொனிப்பொருளில் வருடாந்தம் பல்வேறு செயற்றிட்டங்களை எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது முன்னெடுத்து வருகின்றது. அந்த வகையில் பாடசாலைகளில் இருந்து கிடைக்கப்பெற்ற வேண்டுகோளுக்கிணங்க அவர்களுக்கான கற்றல் உபகரணங்களையும் வழங்கும் செயற்பாட்டினை எமது புலம்பெயர் உறவுகளின் அனுசரணையுடன் நாம் முன்னெடுத்திருந்தோம்.

அதனடிப்படையில்,

- மட்/காந்திபுரம் கலைமகள் வித்தியாலயம்,
- மட்/ மமே/ கித்துள் மகா வித்தியாலயம்,
- மட்/ மமே/ கரடியனாறு மகா வித்தியாலயம்,
- மாவிலங்கத்துறை விக்னேஸ்வரா வித்தியாலயம்,
- புதுக்குடியிருப்பு கண்ணகி வித்தியாலயம்,
- செல்வாநகர் சிவா வித்தியாலயம்,
- இலுப்பட்டிச்சேனை அம்பாள் வித்தியாலயம் உள்ளிட்ட பாடசாலைகளில் இருந்து கிடைக்கப்பெற்ற கோரிக்கைகளுக்கு அமைவாக 200 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் எமது விவேகானந்த சமுதாய அறக்கட்டளையின் ஊடாக வழங்கி வைக்கப்பட்டது
















விவேகானந்த சமுதாய அறக்கட்டளையானது புலம்பெயர் உறவுகளின் உதவியுடன் மாதாந்தம் விசேட உணவு வழங்குதலை முன்னெடுத்து வருகின்றது.

- அன்னை ஸ்ரீ சாரதா நிலையம்
- மயிலம்பாவெளி வாழும்கலை நம்பிக்கை நிதியம்
- நந்தவனம் முதியோர் இல்லம்
- புகலிடம் (சத்துணவுப் பொதிகள்)



இவ்வாறு எமது சிறுவர் இல்லங்கள் மற்றும் முதியோர் இல்லங்களுக்கு நீங்களும் உங்களால் முடிந்த உதவியை வழங்குவதன் மூலம் எமது சமூக வலுவூட்டலில் பங்களிப்பை மேற்கொள்ளலாம்.

மேலதிக தகவல்களுக்கு

http://wa.me/+94776770780

http://wa.me/+94777105569

## Donation – Request details

**Annai Sri Sarada Center**

**Special Meal per Day - LKR 40,000**

**Sponsor a Pre-School**

**per Month - LKR 65,000**

**Nutritious Food per Child - LKR 3,000**

**Jeevananda Girls Home**

**Special Meal per Day - LKR 20,000**

**Nandavanam Elders Home**

**Special Meal per Day - LKR 15,000**

**Sponsor a Youth**

**per Technician - LKR 10,000**

**Sponsor a Student**

**per Month - LKR 3,500**

**Nutrion Pack for Pugalidam Disables Center**

**per Pack - LKR 3,500**

**Education Materials For School students**

**per Pack - LKR 5,000**